KALAI KATHIR 09 DEC 200

# ஈஷா யோகா மையம் மரக்கன்று வழங்கும் விழா

**ஈரோடு:** கண்டிக்காட்டுவலசு பஞ்சாயத்துக்கு உட்பட்ட தெக்கலூர் அரசு நடுநிலைப் பள்ளியில் ஈஷா யோகா மையம் சார்பில் மரக்கன்று வழங்கும் விழா நடந்தது.

எம்.எல்.ஏ., பழனிசாமி தலைமை வகித்து மரக்கன்றுகளை வழங்கினார். அனைத்து குடும்பத்துக்கும் மரக்கன்று வழங்கவுள்ளதாகவும், வருவாய் ஈட்டும் மரங்களை தேர்வு செய்து வழங்குவதாகவும் அருளானந்தம் கூறினார். மொடக்குறிச்சி வட்டார காங்கிரஸ் துணைத் தலைவர் சீதாபதி, வட்டார கலை இலக்கிய பிரிவு தலைவர் சூர்யா வடிவேல், கண்டிக்காட்டு வலசு பஞ்சாயத்து தலைவர் ஈஸ்வரி, அறச்சலூர் டவுன் பஞ்சாயத்து கவுன்சிலர் பராசக்தி குப்புசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர். சண்முகம் நன்றி கூறினார்.



சத்தியமங்கலம் அருகே நெசவாளர் குழந்தைகளுக்கு சத்தி எம்.எல்.ஏ., தர்மலிங்கம் கல்வி உதவி தொகை வழங்கினார். அருகில் யூனியன் துணை தலைவர் சுப்பிரமணி.